**OS.No.160/2020 D.W.1-இளங்கோவன் 25.03.2026**

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் நான் எத்தனையாவது பிரதிவாதி என்று தெரியுமா என்றால் 2வது பிரதிவாதி. என் சகோதரர் வெங்கடேசன் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் அவர் வரவே இல்லை. நான் டேவிட் என்பவருக்கு எதிராக கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கை நானும், என் சகோதரரும் சேர்ந்து நடத்துகிறோமா அல்லது நான் மட்டும் நடத்துகிறேனா என்றால் நான் மட்டும் தான் நடத்துகிறேன். நான் போலியான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் வாங்கிய மின் இணைப்பு தற்போது இல்லை என்றும், துண்டித்து விட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மின் இணைப்பு உள்ளது. தாவா சொத்தை சட்டத்திற்கு புறம்பாக இந்தியன் வங்கியில் அடமானம் வைத்துள்ளது குறித்து நான் சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் வங்கி அலுவலர்களை சந்தித்தோம். சரியான பதில் சொல்லவில்லை. வாதியை ஏமாற்ற வேண்டுமென்று தாவா சொத்தின் சுவாதீனத்தை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. தாவா சொத்தின் அசல் ஆவணம் இந்த வழக்கின் வழக்கறிஞரிடம் உள்ளதா அல்லது டேவிட்டின் மீது தாக்கல் செய்துள்ள வழக்கின் வழக்கறிஞரிடம் உள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தின் அசல் ஆவணம் என்னிடம் இல்லை என்றும், அதனால் தான் தற்போது ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக சட்டத்திற்கு விரோதமாக போடப்பட்ட கிரய ஒப்பந்தத்திற்கு எதிராக நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் மேற்படி ஆவணம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதனால் தான் ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் உண்மையில் டேவிட் என்பவரிடம் இருந்து எந்த சொத்தையும்

வாங்கவில்லை என்றும், அவ்வாறு சொத்தை வாங்கியிருந்தால் அசல் ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சொத்தை நான் வாங்கவில்லை, என் அப்பா வாங்கி கொடுத்தார். அசல் ஆவணத்தை கொடுத்துள்ள வழக்கறிஞர் பெயர் தெரியுமா என்றால் பெயர் ஞாபகமில்லை. தாவா சொத்தை வாதியிடமிருந்து பறிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தில் தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் முகவரி தெரியுமா என்றால் மனை எண்.171, எல்.ஐ.சி.நகர், பள்ளிக்கரணை. நான் டேவிட்க்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் மருமகன் செல்வகுமாருக்கு தான் தெரியும். அந்த வழக்கின் நிலையை நான் தெரிந்து கொள்ளவில்லையா என்றால் என்னிடம் அவர் சொல்லவில்லை. அந்த வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் கிரயம் பெற்ற அசல் ஆவணத்தை அந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி மௌனம் காக்கிறார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)